உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5

# செய்திக்குறிப்பு

## நோய் தொற்று பரவாமல் தடுக்க நகராட்சி ஸ்தல அபராதம் விதித்தல் தொடர்பாக.

கொரோனா நோய்தொற்று தற்போது வேகமாக பரவி வருவது அனைவரும் அறிந்ததே. அதனை புதுச்சேரியில் பரவாமல் தடுக்க புதுவை அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. அதன் ஒரு அங்கமாக தற்போது புதுச்சேரி மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு அரசாணை வெளியிட்டுள்ளது. இந்த அரசாணையானது புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973-ன்படி பிரிவு 440 கீழ் நோய்தொற்று பரவாமல் தடுக்க வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி (1) பொது இடங்களில் அல்லது சாலைகளில் எச்சில், சளி மற்றும் ரத்தம் துப்பினாலோ, (2) முக கவசம் அணியாமல் இருமல் மற்றும் தும்மினாலோ, (3) முக கவசம் அணியாமல் பொது இடங்கள் மற்றும் பணியிடங்களில் இருந்தாலோ, (4) பாதிக்கப்பட்டவர்கள் உபயோகப்படுத்திய பொருட்களை வெளியில் எறிந்தாலோ (5) சமூக இடைவெளியை பின்பற்றாமல் இருந்தாலோ உடனடியாக ஸ்தலத்திலேயே நகராட்சி ஊழியர்கள் மூலம் அபராதம் விதிக்கப்படும் என்பதை இதன்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, உழவர்கரை நகராட்சியானது, மேற்சொன்ன தவறு செய்பவர்கள் மீது ரூ.100/- வரை அபராதம் விதிக்க தனது ஊழியர்களை நியமித்துள்ளது. ஆதலால் பொதுமக்கள் இதனை கருத்தில் கொண்டு உழவர்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கண்டவாறு தவறுகள் செய்யாமல் பொது சுகாதாரத்தை பேணி கொரோனா நோய்தொற்று பரவுவதை தடுக்க அரசுக்கு ஒத்துழைப்பு தருமாறு இதன்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவண்,
**M. கந்தசாமி**
**ஆணையர்**

---

கோ.எண்: 1814/உ.ந/சுகாதாரம்/2020 தேதி, 21-04-2020

மேற்கண்ட செய்தியை தங்கள் பத்திரிக்கையில் வெளியிடுமாறு / டி.வி.யில் செய்திப்பகுதியில் ஒளிப்பரப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
Kandasamy 21/4/2020
**(M. கந்தசாமி)**
**ஆணையர்**

பெறுநர்